டயர் பழுதுபட்டு நின்றது. மற்ற இரண்டு வண்டிகளில் ஒன்றை துரத்திச் சென்று நிறுத்தினர். மற்றொன்று தப்பிச் சென்றது. வண்டிகளில் இருந்தவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

சுட்டதினால் எவரும் உயிரிழக்கவோ, காயமுறவோ இல்லை. பொதுச் சொத்துக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பிடிக்கப்பட்ட இரண்டு வண்டிகளிலும் கள்ளத்தனமாக கடத்தி வரப்பட்டிருந்த 12 இலவங்க மூட்டைகள் கைப்பற்றப்பட்டன.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இலவங்கம் போன்றவை கள்ளக்கடத்தல் செய்யப்படுவது அடிக்கடி ஏற்படுகிறது. இதை ஒழிக்க கடலோரப் பகுதிகளில் ஒற்றர் படையை அமைக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது முழுவதும் சுங்க இலாகாவைப் பொறுத்த விஷயம். அவர்கள் மிகுந்த கண்காணிப்புடன் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டான நிகழ்ச்சியாகும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக பாக்கு மூட்டைகள் கிராம்பு மூட்டைகள் ஏற்றிவரக்கூடிய வண்டிகள் பல பிடிபடுகின்றன. இது சம்பந்தமாக அந்த வண்டிகள் யாருடையவை, எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மூன்று மோட்டார் வண்டிகளின் உரிமையாளர்களின் பெயர்கள் (1) எம். எஸ். வி. 1273—திரு. வி. ஏ. பாட்சா, சென்னை-53, (2) எம். எஸ். ஆர். 5266—திரு. பி. ராஜன், சென்னை-17, (3) டி. எம். சி. 1807—திரு. இந்துநூரி லட்சுமணராவ், சென்னை-17, (3) இந்த மூவரும் இந்த வண்டிகளின் உரிமையாளர்கள் என்று தெரிகிறது.

வழக்குகள் பதிவு.

* 549 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் இலாகாவினர் ஒரு மாதத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்ற விதிமுறை நடைமுறையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.